செ.வெ.எண் 48 நாள்: 18.11.2021

**பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் மற்றும் ஆலத்தூர் ஒன்றிய பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப. ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்**

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஒன்றியம் குன்னம் கிராமத்தில் உள்ள மினி குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப. ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.11.2021) ஆய்வு செய்தார்கள்.

அங்கு பொதுமக்களுக்கு முறையாக குடிநீர் வழங்கப்படுகிறதா என்பதையும் பார்வையிட்டார், அதனைத் தொடர்ந்து குன்னம் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதிக்கு சென்று அங்கு பல்வேறு அடிப்படை வசதிகள் மேம்பாடு செய்யப்படவேண்டிய பகுதிகளை பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து பிலிமிசை சாலையில் இலுப்பக்குடி அருகில் மருதை ஆற்றில் மழை வெள்ளம் செல்வதை ஆய்வு செய்தார்கள். அப்பகுதியில் உள்ள பொதுமக்களை விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் எனவும், நீர்நிலைகளுக்கு அருகில் செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தினார்கள். மேலும் அலுவலர்கள் கண்காணிப்புடன் இருக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து கொண்டியாறு தரைப்பாலத்தில் மழைநீர் செல்வதையும் ஆய்வு செய்தார். தொடர்ந்து கொளத்தூர் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் வடிகால் அமைக்க உள்ள பகுதியை பார்வையிட்டார். மேலும் கொளக்காநத்தம் பகுதிகளிலும் பல்வேறு மேம்பாட்டு பணிகள் செய்யப்படவுள்ள பகுதிகளை நேரில் பார்வையிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப. ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப. அவர்கள் ஆய்வு செய்தார்

ஆய்வின்போது உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு. பாரதிதாசன், ஆலத்தூர் ஒன்றியக் குழு தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. மரியதாஸ் (வேப்பூர்), திரு. மணிவாசகம் (வேப்பூர்), திரு. ஸ்டாலின் (ஆலத்தூர்), திரு. இமயவரம்பன் (ஆலத்தூர்), கொளக்காநத்தம் ஊராட்சி மன்ற தலைவர் திரு. ராகவன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர்.**